
தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 9
இதழ் : 6
ஏப்ரல் – 2013



**தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளுடைய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.** 1 நாளாகமம் 11:9

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்





# Rev. மங்குபுரியா

## பாட்டன்பூரா, குஜராத்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் மங்கு புரியா. நான் குஜராத் மாநிலத்தில் பீல் ஆதிவாசிகள் நிறைந்துள்ள தாகோத் மாவட்டத்தில் தான்பூர் தாலுகாவில் திருடர்கள், குடிகாரர்கள், மந்திரவாதிகள் நிறைந்த பாட்டன்பூரா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.

எனது வீட்டில் அனைவரும் அந்நிய தெய்வங்களையும் துர் தேவதைகளையும் வணங்கியதால் பிசாசின் பிடியினில் சிக்கி நோயினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தோம். மருத்துவம் மற்றும் மந்திரவாதங்கள் செய்து விடுதலைக்காக சுமார். ரூ. 1.5 லட்சம் வரை பல வருடங்கள் செலவு செய்தும் பலனில்லாமலும் வருடத்திற்கு ஒருவர் என எங்கள் குடும்பத்தில இறந்தும் வந்தார்கள்.

இந்த சூழ்நிலையில் சிமளியா என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வரும் சகோ. வர்சிங் பர்மார் அவர்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவர்களிடம் ஜெபிக்கும்படியாக குடும்பமாகச் சென்றோம். அவரும் எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார். பின்பு ஆலய ஆராதனைகளில் கலந்து கொண்டோம். ஒரு சில வாரங்களில் எங்கள் முழுக்குடும்பமும் நோயிலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் தேவனால் விடுவிக்கப்பட்டது.

அதன்பின் நாங்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவ மன்னிப்புப் பெற்று விசுவாசிகளானோம். மேலும் தேவன் என்னைத் தம்முடைய ஊழியத்தினைச் செய்ய அழைத்தார். அந்த அழைப்பினை ஏற்று ஷாலோம் ஊழியத்தில் இணைந்து எனது சொந்த கிராமமான பாட்டன்பூரா கிராமத்தில் ஊழியத்தினை ஆரம்பித்தேன். B.Th., இறையியல் கல்வி கற்று, 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக தேவக் கிருபையால் பிரதிஷ்டை பெற்று இப்பொழுது தான்பூர் தாலுகா முழுவதும் இரட்சிக்கப்பட ஊழியம் செய்துவருகின்றேன்.

எனது சபையில் 65க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர். எனக்காக, குடும்பத்திற்காக, நாங்கள் செய்கின்ற ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Living Word Missionary Church, Chennai.**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



## *கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்களைக் கடந்த மூன்று மாதங்கள் தேவன் நம்முடன் இருந்து வழிநடத்தி பாதுகாத்து ஆசீர்வதித்து வந்தபடியால் தேவனைத் துதிப்போம். இந்த ஏப்ரல் மாதம் முழுவதும் தேவன் நம்முடன் இருந்து பெரிய காரியங்களைச் செய்வாராக!

கடந்த மாதத்தில் பணித்தளத்தில் மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநில ஊழியர் கூடுகை, தலைமை ஊழியக்காரிகளின் சிறப்பு கூடுகை, இராஜஸ்தானில் ஒய்வு நாள் பாடசாலை ஆசிரியர்கள் கூடுகை, அரசுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான விசேஷித்த பிரார்த்தனைக் கூடுகை, 10 இலட்ச ஆத்தும ஆதாய சிறப்பு சுவிஷேசகன் திட்டக் கூடுகை ஆகியவற்றை நடத்தத் தேவன் கிருபை தந்தார்.

தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படி கடந்த மார்ச் மாதம் 7 முதல் 18ம் தேதி வரை துபாய் தேசத்திற்குச் சென்று கர்த்தருடைய ஊழியங்களை நிறைவேற்ற தேவன் கிருபை தந்தார். அன்பு சகோதரர் **கிறிஸ்டோபர் ஆபிரகாம்** அவர்கள் துபாய் தேசத்தில் அநேக சபைகள் மற்றும் தேவ ஊழியர்களையும், குடும்பங்களையும் அறிமுகம் செய்து ஒவ்வொரு நாளும் ஊழியங்களை ஒழுங்கு செய்தார்கள். அவர்கள் குடும்பத்திற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறேன்.

இம்மாதம் Children Bible Classes க்கான ஆயத்தங்கள் நடைப்பெற்று வருகிறது. இந்த வருடமும் சுமார் 30,000 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்கள் கிறிஸ்துவுக்குள் பெலப்பட திட்டமிட்டு செயல்படுகிறோம். 30,000 மாணவர் கையேடுகள், 800 க்கும் அதிகமான ஆசிரியர்கள் பயிற்சிக் கையேடுகள் பாடல்புத்தகங்கள், படங்கள், கருப்பொருள் பாடல்களின் ஆடியோ CD ஆயத்தமாக்கப்பட்டு வருகிறது. மேலும் 15 ம் தேதி முதல் 25 ம் தேதி வரை 4 பகுதிகளாக நடைபெறும் CBC ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஊழியர்கள் கூடுகையைத் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்பதுடன், உங்கள் பங்குகளையும் தவறாது அனுப்பி சிறுவர் ஊழியங்களைத் தாங்குங்கள். ஷாலோம் தலைமை, பணித்தள அலுவலகங்களுக்காகவும் மற்றும் முன்னேற்றப் பணிகளுக்காகவும், அதோடு என் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**“சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி, உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல்களை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன்”.** ஏசாயா 54:11

**ஏப்ரல் மாத ஊழியத்திற்காக விஷேசமாக ஜெபியுங்கள்**

**ஷாலோம் மருத்துவப் பணிகள்**

பீல் ஆதிவாசி மக்களையும், ஷாலோம் ஊழியங்களையும் கிறிஸ்துவின் பேரில் வைத்த அன்பின் நிமித்தமாக நேசித்து வந்த **Dr. Inba** அவர்கள் Rusha வில் பணியில் இருந்து ஒய்வு பெற்று ஜுன் மாதம் முதல் ஷாலோம் பணித்தளத்தில் மருத்துவப் பணிகளைப் பொறுப்பேற்று நடத்த முன் வந்துள்ளார்கள். அவர்களுடன் **Dr. Able** மற்றும் அவரது துணைவியார் **Dr.Jolly** அவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட அர்ப்பணித்துள்ளார்கள். இந்த மருத்துவப் பணிகளுக்காக சரியான இடவசதி, மருத்துத் துறை பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் தேவையான அனுமதி போன்ற அனைத்துக் காரியங்களையும் தேவன் வாய்க்கச் செய்ய உங்கள் ஜெபங்களை அதிகமாக நாடுகிறோம். ஏப்ரல் **9–12** வரை அதற்காக சிறப்பு ஆயத்த திட்டக் கூடுகையை நடத்துவதற்கும், **12.04.2013** அன்று தாகோத்தில் நடைபெற உள்ள சிறப்பு மருத்துவ முகாம் ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.

**மேந்திகேடா கிராம ஆலயப் பிரதிஷ்டை**

கோவில்பட்டி **நெகேமியா ஜெபக்குழுவின்** மூலமாக 19/04/2013 வெள்ளிக்கிழமை அன்று மேந்திகேடா கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தின் பிரதிஷ்டையை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**ஆங்கிலப் பயிற்சி முகாம்**

கடந்த ஆண்டு M.C.C. ஆசிரியர்கள் பணித்தளத்திற்கு வந்து ஆங்கிலப் பயிற்சி முகாம் நடத்தியது போல இவ்வருடமும் **4** பேர் கொண்ட குழுவாக பணித்தளத்திற்கு வந்து **29.4.2013** முதல் **05.05.2013** வரை மூத்த சுதேச ஊழியர்கள், Project மற்றும் பள்ளிக்கூட ஊழியர்கள், குறிப்பாக **12**ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு முகாம்கள் ஆசீர்வாதமாக நடத்தப்பட ஜெபியுங்கள்.

**CBC**

இந்தமாதம் **15**ம் தேதி முதல் **25**ம் தேதி வரை பணித்தளங்களில் **4** பிரிவுகளாக நடைபெறவுள்ள, CBC பயிற்சி முகாம்களுக்காகவும், இதன் தேவை **ரூ. 3 இலட்சம்** கிடைக்கப் பெறவும் ஜெபியுங்கள்.

ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள ஊழியர்கள், மூப்பர்கள், திருமண்டல தலைவர்கள், அலுவலக மற்றும் ஊழியர்கள் போன்ற கூடுகைகளுக்காக ஜெபியுங்கள்.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# SHARING LOVE MISSION

**(A Missionay task among the Bhil Tribe)**

(Registered under Indian Trust Act 1961 Vide 35/1991 Tamil Nadu)

Regd. Office: N. No. 5A/323, O.No. 5/168, Caldwell Colony, 3rd Street, TUTICORIN - 628 008.
Ph.: 0461 - 2375468, Cell : 09345675468
e-mail : info@shalommission.in web : www.shalommission.in

*Rt. Rev. Dr. V. Devadass*

***Founder & General Secretary of Sharing Love Mission,***
***Founder Bishop of Shalom Diocese in India***


## ***சென்னை வட்டார ஷாலோம் ஆதரவாளர்களுக்கான சிறப்புக் கடிதம்....***

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! தேவனுடைய கிருபைக்காகவும், உங்கள் ஊக்கமான ஜெபம், உற்சாகமான காணிக்கை போன்றவற்றிகாகவும் நன்றி கூறுகிறோம். பணித்தளங்களில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் ஊழியங்களை ஆசீர்வதித்து வருவதற்காக அவரைத் துதிக்கிறோம்.

**சென்னை பகுதியில் நம்முடைய ஷாலோம் ஊழியத்தின் முன்னேற்றப் பணியைக் கவனித்து வந்த NúLô. GTú]No úP²Vp அவர்கள் நம் ஷாலோம் ஊழியத்திலிருந்து 01.03.2013 முதல் விலகிக் கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

இந்நாட்களில் பீல் மக்கள் மத்தியில் சுவிஷேசத்திற்குத் தேவன் திறந்த வாசலையும் திரளாக விளைந்த பலனின் அறுவடையைத் தந்ததோடு சென்னை வட்டார முன்னேற்றப் பணிகளை நேர்த்தியாகச் செய்யவும் கிருபைச் செய்தார். கீழ்கண்ட முகவரியில் நமது சென்னை வட்டார ஷாலோம் முன்னேற்ற அலுவலகச் செயல்பாடுகள் நடைப்பெற்று வருகிறது. அதின் பொறுப்பாளராக **சகோ. கார்த்திக்** அவர்களுடன் இணைந்து **சகோ. ஜேசுராஜ்** அவர்களும் முன்னேற்றப் பணிகளைக் கவனித்து வருகிறார்கள்.


ஆகவே, மேற்கண்ட ஊழியர்கள் தங்களை மாதந்தோறும் சந்திக்க வரும் போது தங்கள் ஜெபத்துடன் கூடிய காணிக்கைகளைக் கொடுத்து **ரசீதுகளைப்** பெற்றுக்கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் விவரங்களுக்கு ஷாலோம் முன்னேற்றப் பணிப் பொறுப்பாளர் **சகோ. கார்த்திக்** அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**"உன் தேவனாகிய கர்த்தர்... உன்னை மேன்மையாக வைப்பார்".** (உபா 28:1)

தேவ அறுவடைப் பணியில்
உங்கள் அன்பு சகோதரன்

(பேராயர் **V.** தேவதாஸ்)

**சென்னை கிளை அலுவலக முகவரி**
**Bro. R. Karthikeyan**
**Shalom Development Office**
No. 102/II Main Road, Sathya Nagar, Padi,
Chennai - 600 050
Phone: 044 : 3192246, Cell : 8144275468



# "தாவீதுடன் இருந்த சேனைகளின் தேவனாகிய கர்த்தர்"

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

*பிரியமானவர்களே !*

சேனைகளின் கர்த்தராகிய தேவன் ஒவ்வொரு மாதமும் நமக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, நம்மோடுகூட இருந்து நம்மை நடத்தி வருவதற்காக அவரை துதிப்போம். தேவன் இம்மாதமும் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக! வேதத்தில் தேவன் அநேக தேவ தாசர்களோடு கூட இருந்து அவர்களை ஆசீர்வதித்துள்ளார். அவர்களுள் தாவீதும் ஒருவராவார். தேவன் தாவீதோடு கூட இருந்து எவ்வாறாக அவனை ஆசீர்வதிக்கிறார் என்பதைக் குறித்து சற்றே தியானிப்போம் :

II சாமுவேல் 5:10. சொல்லுகிறது : **"தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்".** கர்த்தர் அவனோடே கூட இருந்தார். இது போல நம்மோடே கூட தேவன் இருக்கும்போது நாமும் நாளுக்கு நாள் விருத்தியடைவோம்.

**"தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தார்" II சாமுவேல் 5:10. "தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனை காப்பாற்றினார்". II சாமுவேல் 8:14 (பி)**

அதைப்போல தேவன் நம்மோடே கூட இருக்கும் போது நாம் செல்லும் இடமெல்லாம் தேவன் எல்லா தீங்குக்கும் நம்மையும் விலக்கிக்காப்பார். **"அப்படியே தாவீதின் கீர்த்தி சலக தேசங்களிலும் பிரசித்தமாகி, அவனுக்கு பயப்படுகிறப் பயத்தைக் கர்த்தர் சகல ஜாதிகளின் மேலும் வரப்பண்ணினார்". I நாளா 14:17**

தேவன் தாவீது கூட இருந்தபடியால் அவன் கீர்த்தி சகல தேசத்திலும் பிரசித்தமானது. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

**தாவீதின் தேவன் நம்மோடு இருக்கும் போது**

- அவர் நம்மை கனப்படுத்துவார்
- அவர் நம்மை பிரசித்தப்படுத்துவார்
- நம்மை குறித்த பயம் மற்றவர்களுக்கு உண்டாகும்.

தேவன் தாவீதோடே இருந்தபடியினால்தான் மேற்கண்ட 3 வகையான மேலான ஆசீர்வாதங்கள் அவனுக்குக் கிடைத்தது. அதே வேளையில் தாவீதும் தேவனோடு கூட இருந்தார் என்பதை மறக்க கூடாது. தாவீதின் வாழ்க்கையை தியானிக்கும்போது தாவீது தேவனுடன் வாழந்தபடியால், வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டங்களிலும் தேவனை தேடினப்படியால் தேவன் அவனோடே கூட இருந்தார். நாமும் அவ்வாறு தேவனை அனுதினமும் தேடும்போது தாவீதுடன் இருந்து அவனை ஆசீர்வதித்த ஆண்டவர் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

## குடியிருக்கும் இடத்திற்காக கர்த்தரின ஆலோசனையை நாடும் தாவீது

**"பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்கு கர்த்தர்: போ என்றார்; எவ்விடத்திற்கு போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார்". II சாமுவேல் 2:1.**

தாவீது தன் முழு தேசத்திற்கும் அதிகாரியாய் இருந்த போதிலும், தன் இஷ்டப்படி குடியிருக்க ஒரு இடத்தை தேடாமல், தான் விரும்புகிற பட்டணத்திற்குப் போகலாமா? என்று ஆண்டவரிடம் விசாரிக்கிறான். ஆண்டவர் போ என்று சொன்னார்.

அப்படி கூறின பின்பும் கூட தாவீது குறிப்பாக எந்த இடத்தில் குடியிருக்க வேண்டும் என்று கர்த்தரிடம் கேட்டான்? அப்பொழுது கர்த்தர் எப்ரோனுக்கு போ என்றார். பின்பு தாவீது தன் குடும்பத்தோடு எப்ரோனுக்கு சென்று குடியேறினான். முழு தேசத்தையும் ஆண்டவர் ஆசீர்வதித்து கொடுத்திருந்தாலும் கூட தேவசித்தத்தின்படி குடியிருப்பது தான் ஆசீர்வாதம் என்று கருதி கர்த்தரை தேடினான்.

## யுத்தம் செய்ய தேவனுடைய ஆலோசனையை நாடும் தாவீது

**பெலிஸ்தரோ வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள். பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர்: போ, பெலிஸ்தரை உன்கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார். II சாமுவேல் 5:18,19**

தாவீது ராஜாவாக இருந்து தன்னுடைய கையில் பலத்த சேனையை வைத்திருந்தாலும், தன் படைபெலத்தின் மீது நம்பிக்கை வைக்காமல், தன்னோடு போரிடவந்த பெலிஸ்தியருக்கு விரோதமாக போகலாமா? என்று கர்த்தரிடத்தில் விசாரித்தான். கர்த்தர் போ என்று சொன்னார். அதன்படி சென்ற தாவீது வெற்றியும் பெற்றான்.

**பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள். தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரே இருந்து அவர்கள் மேல் பாய்ந்து II சாமுவேல் 5: 22:23**

மறுபடியும் பெலிஸ்தியர் வந்த போது முன்பு தான் பெற்ற வெற்றியின் அனுபவத்தை நம்பாதபடி, போனமுறை தான் ஜெபித்தோம் என்று விட்டுவிடாதபடி, மறுபடியும் ஆண்டவரிடத்தில் ஜெபித்தான். கர்த்தர் அவனுக்கு புதிய ஆலோசனையை கொடுத்து, நீ நேராய் போகாமல் அவர்களுக்கு பின்னாலே சுற்றி, முசுக்கட்டை செடிகளுக்கு எதிரேயிருந்து அவர்கள் மேல் பாய்ந்து முறியஅடிக்க சொன்னார்.

அதன்படி தாவீது பெலிஸ்தியரை முறியடித்தான். தாவீது அரசனாய் இருந்த போதிலும் கூட சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தான் என் பெலன் என்று அவரை தேடினான்.

**தேவனுக்காக ஆலயம் கட்டுவதிலும் தேவ ஆலோசனையை தேடும் தாவீது**

**அப்பொழுது ராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று: என்சகோதரரே, என் ஜனமே நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியும் நமது தேவனுடைய பாதப்படியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் மனதிலே நினைத்து கட்டுவதற்கு ஆயத்தமும் பண்ணினேன். I நாளா 28:2**

ஆட்டுமந்தையை மேய்த்துக்கொண்டிருந்தவனை தேவன் உயர்த்தி அரசனாய் மாற்றினார். தாவீதினிடத்தில் நிலங்களும், பொருள்களும், பொன்னும், வெள்ளியும், நிபுணர்களும், பிரபுக்களும், வேலையாட்களும் இருந்தார்கள். ஆனாலும் கூட ஆலயம் கட்டலாமா? என்று தேவனுடைய தீர்க்கதரிசி நாத்தானிடத்தில் விசாரிக்கிறான். கர்த்தர் தம் தீர்க்கதரிசி நார்த்தான் மூலமாக தாவீதாகிய நீ அதை கட்டாதபடி, உன் குமாரனாகிய சாலோமோன் அதைக் கட்டுவான் என்று தன் சித்தத்தை வெளிப்படுத்தினார். தாவீதும் அந்த தேவ ஆலோசனையை ஏற்றுக்கொண்டு தன் குமாரனாகிய சாலோமோன் மூலமாக அதை கட்டும்படியாக ஒப்புக் கொண்டான்.

இதே போல, தாவீது தன் வாழ்நாள் முழுவதிலும் ஒவ்வொரு காரியத்திலும் தேவ ஆலோசனையை நாடி பெற்று அதன்படிதான் நடந்து வந்தான். ஆனபடியினால் தான் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தாவீதோடு கூட இருந்து அவனை ஆசீர்வதித்தார். இதை வாசிக்கும் தேவ பிள்ளைகளே நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கை பாதையிலும், ஊழியப் பாதையிலும் ஒவ்வொரு காரியத்திற்கும் தேவனை சார்ந்து, தேவ ஆலோசனையை பெற்று அதன்படி செயல்படுகிறீர்களா? அப்படி நாம் தேவ ஆலோசனையை பெற்று ஒவ்வொரு காரியத்திலும் செயல்படுவோமென்றால்.

**"தாவீதோடு கூட இருந்து வழி நடத்தி ஆசீர்வதித்த கர்த்தர், நம்மோடும் கூட இருந்து நம்மையும் ஆசீர்வதிப்பாராக"!**

## *கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்*

அன்பான தேவப் பிள்ளைகளே, இந்த 2013ம் ஆண்டு இறுதிக்குள் 100 சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும். அப்படியானால் நம் மொத்த சுதேச ஊழியர்களின் எண்ணிக்கை 600க்கும் அதிகமாகும். புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய, 100 சுதேச ஊழியர்களுக்கும், மாதம் 2000/– கொடுத்துத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் நமக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

என்றாலும் உங்களால் இயன்றவரை தவறாமல் கொடுத்து பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக சுவிசேஷம் சொல்ல உதவுங்கள். தேவன் பூமியிலும் பரலோகத்திலும் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஏற்கனவே இந்த ஊழியங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதரவாளர்கள் புதிய ஆதரவாளர்களைக் கண்டிபிடித்து ஊழியங்களைத் தாங்க அன்பாய்க் கேட்கிறோம்.

கடைசி காலமானதால் எப்படியாகிலும் அனைத்துப் பீல் மக்களையும் இரட்சிப்பிற்குள் கொண்டுவர பாடுபடுவோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



- ❋ நம் தலைமுறையில் முழு பீல்மக்களுக்கும் சுவிஷேசம் அறிவிக்கப்படவும், 2020க்குள் 7000 கிராமங்களில் 7000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

- ❋ ஷாலோம் திருமண்டல சபைப் பணிகளின் வளர்ச்சிக்காகவும், ஷாலோம் மிஷனெரிப் பணிகளின் திட்டங்களுக்காகவும், ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

- ❋ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் மற்றும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

- ❋ ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

- ❋ தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள அநேகக் கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று மேற்கூரை அமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்ககள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

- ❋ நமது பணித்தளங்களில் மே மாதம் நடைபெறவிருக்கும் CBC (சிறுவர் வேதாகம பள்ளிகளுக்காகவும்) இதில் பங்கேற்கவிருக்கும் 30 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்படவும், இதற்காக நடைபெற்று வரும் ஆயத்தப்பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

- ❋ வரும் ஜுன் மாதம் புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைக்கும் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களை தேவன் ஆசீர்வதித்து ஞானத்தினால் நிரப்பவும், மேற்படிப்பிற்காக காத்திருப்போருக்கு தேவன் நல்ல வழி வாசல்களைத் திறக்கவும் ஜெபியுங்கள்.

- ❋ 2013 மே மாதம் 5ம் தேதி தூத்துக்குடி, A.S.K.R. திருமண ஹாலில் வைத்து நடைபெற இருக்கும் மிஷனெரி தரிசனக் கூடுகைக்காக, அநேக தேவ பிள்ளைகள் பங்கு பெற்று மிஷனெரி தாகம் பெற, கூடுகையை தேவன் ஆசீர்வதிக்க, தேவதாசர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளும்படி அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான கல்விச் சுற்றுலா

**Shalom - CDC - Hirola (Gujarat)**

Shalom - CDC Project மூலமாக ஹிரோலா கிராமத்தில் கல்வி பயின்று வரும் சுமார் 250 ஆதிவாசி பிள்ளைகளுக்காக தேவனைத் துதிக்கிறோம். ஒவ்வொரு வருடமும் இந்த பிள்ளைகளை வெளியிடத்திற்கு சுற்றுலா பயணம் அழைத்துச் செல்கிறோம். இந்த வருடம் 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 70 பிள்ளைகள் மற்றும் Staff 13 பேரும் 26.02.13 அன்று குஜராத் காந்திநகரில் அமைந்துள்ள சட்டசபையை பார்வையிடும்படியாக அழைத்துச் சென்றோம். குஜராத் சட்டசபை நடந்துக் கொண்டிருக்கும்போது பார்வையாளர் பகுதியிலிருந்து பார்வையிடும்படியாக முறையான அனுமதியை தேவக் கிருபையால் முன்னதாகவேப் பெற்றுக் கொண்டோம்.

Project Director **சகோ. கேரட்** மற்றும் Project ஒருங்கிணைப்பாளர் **சகோ. வாலஸ்** அவர்கள் இந்த ஏற்பாடுகளையெல்லாம் மிகவும் நேர்த்தியாகச் செய்தார்கள். அதன்படியே அன்றையதினம் சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போது பார்வையாளர்கள் பகுதியில் நமது பீல் ஆதிவாசி மாணவர்கள் சுமார் 20 நிமிடம் அமர்ந்து பார்வையிட்டார்கள். அங்கு பாதுகாப்பு துறையினர் மூலமாக நடைபெற்ற பரிசோதனைகள் மற்றும் படித்த அதிகாரிகளின் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பார்த்து சட்டசபையைக் குறித்த ஒரு தெளிவை பெற்றுக் கொண்டார்கள். அதைக் கண்டு பிள்ளைகளும் அதிக மகிழ்ச்சி அடைந்தனர். தேவன் கொடுத்த வாய்ப்பிற்காக தேவனைத் துதிக்கிறோம். அதன்பின் அகமதாபாத்—ல் அமைந்துள்ள "Science City" என்ற இடத்தில் அறிவியல் சம்பந்தமான காரியங்களைப் பார்வையிட்டதின் மூலம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியை பிள்ளைகள் அறிந்துக் கொண்டார்கள். மற்றும் பிள்ளைகளுக்கு நல்ல உணவுகள் வழங்கப்பட்டப் பின் சுகமாக வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார்.

**Shalom - CDC - Jeri (Gujarat)**

Shalom - CDC Project மூலமாக ஜெரி கிராமத்தில் கல்வி பயின்று வரும் பிள்ளைகளுக்கென்று கடந்த பிப்ரவரி 26—ம் தேதி அகமதாபாத்திற்கு கல்வி சுற்றுலா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை Project ஒருங்கிணைப்பாளர் **சகோ. திவாகர்** அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து நடத்தினார்கள். இதில் 7ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை படிக்கிற பிள்ளைகளில் 56 பிள்ளைகள் மற்றும் Staff 14 பேரும் சென்றார்கள். வெளி உலகம் அறியாமல் கிராமங்களிலேயே வாழ்ந்து வந்த இந்த பீல் கிராமப் பிள்ளைகள் ஷாலோம் Compassion Project மூலம் முக்கிய இடங்களைப் பார்க்க தேவன் கிருபை செய்தார். மிகுந்த உற்சாகத்துடன் கிளம்பிய இந்த சுற்றுலாக்குழு அகமதாபாத்தில் உள்ள "Science City" (அறிவியல் நகரம்) என்று அழைக்கப்படும் இடத்திற்குச் சென்று அறிவியல் சம்பந்தமான காட்சியரங்கம் மற்றும் விண்வெளி மையத்தை விரிவாக விளக்கும் கண்காட்சிகள் மற்றும் 3D திரையரங்கத்தில்

முதன் முதலில் நிலவில் அடியெடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ட்ராங் பற்றிய குறும்படம் பார்த்ததின் மூலம் விஞ்ஞானம் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அதன்பின் “Energy Park” என்ற இடத்தில் பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியோடு விளையாடினார்கள். இவை யாவும் நமது மாணவர்களுக்கு புது அனுபவமாக காணப்பட்டது.

இதேப்போன்று 4ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் சுமார் 61 பிள்ளைகளும் 14 Staffகளும் பரோடா என்ற இடத்திற்கு மார்ச் 9ம் தேதி கல்வி சுற்றுலா பயணம் மேற்கொண்டார்கள். இப்பயணத்தின்போது இராஜாக்களுடைய சயாஜிராவ் அவருடைய வரலாற்றையும், இராஜாக்களுடைய ஆபரணங்கள், போர்க்கவசம், ஓலைச்சுவடுகள் மற்றும் ஓவியங்கள் ஆகியவற்றை கண்காட்சியகத்தில் (மியூசியம்) கண்டு தாங்கள் பாடத்தில் படிக்கிறவைகளை நேரில் ஆச்சரியத்தோடு கண்டு மகிழ்ந்தனர்.

மேலும் மிருகக்காட்சி சாலையில் காட்டில் வாழும் மிருகங்கள், பறவைகள் மற்றும் அதன் வகைகளையும், அதோடு நீரில் வாழும் உயிரினங்கள் இவை யாவற்றையும் பார்த்து, படைத்த ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள். அதன்பின் **“அஜ்வா பார்க்”** என்ற பூங்காவில் சென்று மலர்த்தோட்டம் மற்றும் “Music Water Fountain” காட்சிகளைப் பார்த்தார்கள். இவர்களுக்கு நல்ல உணவு வழங்கப்பட்டது. இச்சுற்றுப்பயணத்தில் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் கலந்துக் கொண்டது பிள்ளைகளுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்தது.

நாளுக்குநாள் பிள்ளைகள் அறிவிலும், ஞானத்திலும், வேத அறிவிலும் அதிகமாய் வளர்ந்து வருவதைக் குறித்து தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

---

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

***அன்பான ஆதரவாளர்களே,***

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

---

## ஷாலோம் பிரதிநிதிகள் தேவை....

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் பணித்தளங்களில் ஊழியங்கள் வளர்ந்து பெருகி வருகின்றன. அதே நேரத்தில் அதற்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இதற்காக தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளை சேகரித்து அனுப்பும், **ஷாலோம் பிரதிநிதிகள்** 300 பேர் தேவை. கர்த்தரால் ஏவப்படுவோர் எங்களைத் தொடர்பு கொள்ள அன்பாய்க் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# துதி ஆராதனை...



சகோதரி வஹிதா தேவதாஸ்

**"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்".** சங்கீதம் 34:1

**"பூமியின் குடிகளே எல்லோரும் கர்த்தரை கெம்பீரமாய்ப் பாடுங்கள்"** சங்கீதம் 96:1, 100:1

துதி நம்மை ஆராதனைக்கு அழைத்துச் செல்லுகிறது, துதியின் உச்சக்கட்டம் ஆராதனையாகும். ஆராதனை நம்மை தேவ பிரசன்னத்திற்கு அழைத்து செல்கிறது. ஆராதனை நம்மை பரலோகத்திற்கு அழைத்து செல்லும் அல்லது பரலோகத்தின் தேவனை பூலோகத்திற்கு அழைத்து கொண்டு வரும். ஆராதனை என்பது உண்மையான தொழுகை. அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் யோவான் 4:23–26.

ஆராதனை என்பது ஆண்டவரில் அன்பு கூறுவது, அதிகமாய் நேசிப்பது, கர்த்தரை மகிமைப்படுத்துவது, உயர்த்துவது, அவரோடு நெருங்கி உறவாடுவது, புகழ்வது, தேவனை மகிழ்விப்பது, முற்றிலும் நம்மை மறந்து தேவனோடு ஒன்றித்து விடுவது என்று அடுக்கி கொண்டே போகலாம். நாம் தேவனை துதித்து ஆராதிக்கும்போது நடக்கும் காரியங்கள் தான் என்ன? என்பதை வேத ஆதாரத்துடன் பார்க்கலாம் :

★ **துதியின் மூலம் எரிகோ கோட்டை தகர்க்கப்பட்டது :** (யோசுவா 6:20) எக்காளங்களை ஊதி, ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். மகா ஆரவாரத்தோடு முழங்குகையில் துதியினால் எரிகோ கோட்டை தகர்க்கப்பட்டது.

★ **ஆராதனைகள் மூலம் சத்துரு வெட்டுண்டு விழுந்தான் :** (2 நாளா. 20:22) யோசபாத் ராஜாவிற்கும் யூதாவுக்கும் விரோதமாய் சத்துருக்கள் வந்தபோது, அவன் பாடி துதி செய்ய ஆராதனை குழுக்களை நிறுத்தினான். சத்துருக்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்.

★ **ஆராதனையினால் சிங்கத்தின் வாய் கட்டப்பட்டது :** (தானியேல் 6:22) தானியேல் மூன்று வேளை ஆராதிப்பவன். சிங்கக்கெபியில் போடப்பட்ட பின்பு, மறுநாள் காலையிலே ராஜா கெபிக்குச் சென்று துயர சத்தமாய் (20–ம் வசனத்தில்) தானியேலை கூப்பிட்டு, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா? என்று கேட்டார். அதற்கு தானியேல் (22–ம் வசனத்திலே) ராஜாவே, சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார் என்றார்.

★ **ஆராதனையினால் சிறைச்சாலைக் கதவுகள் திறவுண்டது :** (அப்போ. 16:25,26) நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்து பாடினார்கள். சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று.

பிரியமானவர்களே! ஆராதனையைப் பற்றி வேதம் நமக்கு போதிக்கிற காரியங்களை பார்க்கும்போது, நாம் தேவனை துதித்து ஆராதிக்காமல் இருக்க முடியாது. எனக்கு சிறுபிராயத்திலிருந்தே தனியாக தேவனை துதித்து ஆராதிக்கும் பழக்கம் இருந்தபடியால், அதை விடாமல்த் தொடர்ந்து பற்றிக் கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று வந்தேன். கடந்த 2010–ம் ஆண்டில் ஷாலோம் மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் சுமார் 70பேர் இணைந்து 5 மணி நேரம் தொடர்ந்து ஆராதனை நடத்தும்படியாக ஆவியானவர் உள்ளத்தில் ஏவினார்.

அதன்படியே, அந்த நாளிலிருந்து 2 மாதத்திற்கு ஒருமுறை 5 மணிநேர தொடர் ஆராதனையை நடத்தி வருவதற்குத் தேவன் கிருபைச் செய்து வருகிறார். இந்த ஆராதனையில் பரலோகமே கீழே இறங்கி வருகிற அனுபவத்தைப் பெற்று மகிழ்கிறோம். மட்டுமல்லாமல், ஆராதனையில் கட்டுகள் உடைக்கப்படுவதையும், சத்துருவின் கோட்டைகள் தகர்க்கப்படுவதையும் கண்டு தேவனைத் துதிக்கிறோம். பல வருட சாபத்தின் கட்டுகள் துதி ஆராதனையில் தெறிக்கப்பட்டுப் போகிறது. சுவிஷேசம் செல்ல முடியாமல் இருக்கிற கிராமங்களில் வாசல்கள் திறக்கப்படுகிறது, வியாதிகள் மறைகிறது. நடனம் ஆடி, அகமகிழ்ந்து தேவனைத் துதிக்கும்போது, அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டு, எப்பொழுதுமே மகிழ்ச்சியாய் இருக்கும் கிருபையைப் பெற்று தேவமகிமையினால் நிரப்பப்படுகிறோம்.

நவமான பாஷைகளையும், பரலோகத் தரிசனங்களையும் கண்டு, தொடர்ந்து உற்சாகமாய் ஊழியத்தில் முன்னேறிச் செல்லும் பாக்கியத்தை அடைகிறோம். ஷாலோம் திருச்சபை ஆலய ஆராதனைகளில் மிகவும் சிறப்பாய் தேவனைப் பாடி, ஆடி மகிழ்ந்து பல மணி நேரங்கள் தேவனை ஆராதிக்கிறார்கள். பிசாசுகள் அலறி தானே விலகி ஓடுவதால் அற்புத சுகம் உண்டாகிறது. பரிசுத்த ஆவியினால் மக்கள் நிரப்பப்பட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பிரியமான தேவப் பிள்ளைகளே! நீங்களும் தனியாக, குழுவாக, சபையாக தேவனைத் துதித்து ஆசீர்வாதத்தைப் பெற்று மகிழலாமே!

**முழு இரவு ஜெபம் – புதுக்கோட்டை (08.03.2013)**

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! தேவக் கிருபையால் கடந்த 08.03.2013 வெள்ளிக்கிழமை புதுக்கோட்டையிலுள்ள **CSI பிரசன்ன தேவாலயத்தில்** நடைபெற்ற முழு இரவு ஜெபத்தில் நமது ஷாலோம் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். பாடல், ஆராதனையை **சகோ. ஆலன் எல்விஸ், சகோ. ரத்தீஸ்** அவர்கள் நடத்தினார்கள். **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தேவ செய்தியினை அளித்தார்கள். சகோதரர்கள் **சாம் குணசீலன், ஜான்சன் ஜெபராஜ்** இருவரும் ஜெபக்குறிப்புகளை நடத்தினார்கள்.

மட்டுமல்ல குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்த வீடியோ படக்காட்சிகள் மக்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இதைப் பார்த்த அனைவரும் திருப்தியடைந்து, ஆத்துமப் பாரம் கொண்டு தேவனை, மகிமைப்படுத்தினார்கள். இந்தத் திருச்சபைப் போதகர் **Rev. எட்வின் ஜெபராஜ்,** உபதேசியார் **திரு. J. நெல்சன் பொன்ராஜ்** போன்றோர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சபைகளில் நிரம்பி வழியும் பீல் ஆதிவாசி ஜனங்கள்!

## ஓர் ஊழிய ரிப்போர்ட்...

**Rev. S. சந்திர குமார், தூத்துக்குடி**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!

ஷாலோம் மிஷன் ஊழியங்களைப் பார்வையிடுவதற்கு தூத்துக்குடியிலிருந்து குஜராத்திற்கு வந்தேன். குஜராத்தில் கங்கேலா என்ற இடத்தில் உள்ள நமது பணித்தளத்திற்கு நான் அழைத்து வரப்பட்டேன். இங்கு நமது ஷலோம் சபையின் பெரிய தேவாலயத்தைக் கண்டேன். சபைப் போதகரும் மூப்பரும் வந்து என்னோடு தங்களது அனுபவ சாட்சிகளையும் சபை உருவான விதத்தையும் பகிர்ந்து கொண்டனர். சபைப் போதகர் தான் ஒரு பீல் இன ஆதிவாசி எனக் கூறியது மிகவும் வியப்பாக இருந்தது. காரணம், ஆதிவாசிகளில் ஒருவரை இரட்சிப்பிற்குள் கொண்டு வருவதே எவ்வளவு சிரமம் அப்படியிருக்க இவர் ஊழியராக வந்திருப்பது தேவ கிருபை என்பதை உணர்ந்தேன். இவரின் சபைக்கு குறைந்தது 400 பேர் ஞாயிறு ஆராதனைக்கு வருவதாகக் கூறினார். குஜராத், இராஜஸ்தான் மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் உள்ள அனைத்து ஷாலோம் சபை ஊழியர்களும், சபை விசுவாசிகளும் பீல் ஆதிவாசி ஜனங்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன். சபை கட்டுவதற்கு இந்த ஊழியர்களே தங்களின் சொந்த நிலத்தைக் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள் என்பது மிகவும் பெரிய காரியமாகும்.

அடுத்தபடியாக வரம்கேடா என்ற கிராமத்தில் உள்ள நமது திருச்சபைக்குச் செல்ல தேவன் கிருபைச் செய்தார். இங்குள்ள ஷாலோம் திருச்சபை மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டுள்ளது. இங்கே தேவ பணியை செய்து வரும் போதகரின் அனுபவ சாட்சியைக் கேட்க தேவன் கிருபை செய்தார். பயங்கர குடிகாரனாக இருந்த இவர் நம் ஊழியர்களின் மூலமாக விசுவாசத்தில் வழி நடத்தப்பட்டு, ஊழியப் பயிற்சிப் பெற்று போதகராக உள்ளார். இந்த சபைக்கு வரும் விசுவாசிகளில் நூற்றுக்கும் அதிகமானோர் பிசாசுகளின் பிடியிலும், பில்லி சூனியக் கட்டுகளில் சிக்குண்டு, நமது ஊழியர்களின் ஜெபங்களினால் விடுதலைபெற்று இரட்சிக்கப் பட்டவர்களாவார்கள். அதனைத் தொடர்ந்து சிமளியா என்ற கிராமத்திலுள்ள நமது பணித்தளத்தைப் பார்வையிடச் சென்றோம். பல்வேறு எதிர்ப்புகள் ஆரம்பத்தில் இருந்த இந்த கிராமத்தில், தற்போது தேவன் நல்லதொரு சபையைத் தந்துள்ளார் என்று ஊழியர் சாட்சி பகிர்ந்தார்.

தொடர்ந்து இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஷாலோம் திருச்சபைகளைச் பார்க்கச் சென்றோம். இங்கு செவினியா என்ற கிராமத்தில் இளம் ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கு நடைபெறும் T3 பயிற்சி முகாமை நேரில் கண்டு தேவனுக்கு நன்றி கூறினோம். இதில் நூற்றுக்கணக்கான ஆதிவாசி பீல் இளைஞர்களும், மூப்பர்களும் பங்கெடுத்தது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. இதற்குச் சற்று தொலைவில் அமைந்துள்ள பிஜல்பூர் கிராமத்தில்தான் நமது ஷாலோம் சபையின் 8ம் வகுப்பு வரையிலான பள்ளிக்கூடமும், மாணவ மாணவியர் தங்குவதற்கான விடுதியும் உள்ளது. இதை பார்வையிடும்படியாக **சகோ. ஜெயராஜ்** அவர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள். நமது விடுதியில் தங்கிப் படிக்கும் பிள்ளைகள் மதியம் சாப்பிடும் வேளையில் நான் அங்கு சென்றதால், அங்கு படிக்கும் ஆதிவாசிப் பிள்ளைகள்

வயிராற சாப்பிடும் காட்சிகளைக்கண்டு தேவனை மகிமைப்படுத்தினேன். கடந்த மாதப் பத்திரிகையில் மேற்கண்ட பள்ளி மற்றும் விடுதியினைக் குறித்து **“பீல் ஆதிவாசி மக்களுக்கான கல்விப் பணியில்”** என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட தொகுப்பினைப் படித்திருப்பீர்கள். அழிந்து போகிற உலகப் பொருளினிமித்தம் உங்களுக்குச் சிநேகிதரை சம்பாதியுங்கள் என்ற வேத வசனமும் ஆடை இல்லாதவனுக்கு ஆடை கொடு, ஆகாரமில்லாதவனுக்கு ஆகாரம் கொடு என்ற வேத வசனமும் எனக்கு ஞாபகம் வரவே தேவனைத் துதித்தேன்.

10.02.2013 ஞாயிற்றுக்கிழமை குஜராத்தில் உள்ள நமது ஷாலோம் சபைக்குச் செல்லும்போது ஆராதனை நடந்து கொண்டிருந்தது. எல்லா பீல் விசுவாசிகளும் நடனமாடியபடி தேவனைத் துதித்துக் கொண்டிருந்தனர். அதைவிடப் பெரிய காரியம் சபைக்கு உள்ளே நுழைய முடியாத அளவுக்கு பெரும் கூட்ட விசுவாசிகள் இருந்தனர். ஒரு வழியாக சபைக்குள் நுழைந்து சற்று நேரத்தில் தேவ செய்தியை சபையில் கொடுக்க தேவன் கிருபை பாராட்டினர். சுமார் 1350க்கும் அதிகமான விசுவாசிகள் வந்திருந்தனர். அதனைத் தொடர்ந்து வேறொரு பணித்தள ஆராதனைக்குச் சென்று தேவ செய்தியினை வழங்க தேவன் கிருபை செய்தார்.

குஜராத் இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலுமுள்ள மொத்தப் பணித்தள சபைகளை சந்திக்க ஒரு சில ஆண்டுகள் ஆகும் என்பது ஒரு புறம் இருந்தாலும், சில சபைகளைப் பார்த்து அங்குள்ள சாட்சிகளைக் கேட்டு எனக்குள் ஒரு பெரிய மாற்றம் வந்தது. இங்குள்ள அனைத்து ஊழியர்கள், விசுவாசிகள் மட்டுமல்ல. இன்னும் சந்திக்கப்பட வேண்டிய பல்லாயிரக்கணக்கான கிராமங்களும் உண்டு. ஆக இன்னும் எவ்வளவு அர்ப்பணிப்பு, தேவைகள், உதவிக் கரங்கள் வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன். பரலோகத்தில் பங்குபெறும் ஆத்துமாக்களின் கூட்டத்தில் பீல் ஆதிவாசி மக்களின் கூட்டமும் பெருங் கூட்டமாகக் காணப்படும் என்பதில் சந்தேகமில்லை. அனைத்து சபைகளிலும் அபிஷேகம் பெற்ற ஆதிவாசி விசுவாசிகள் அதிகம் உள்ளனர். எனவே தமிழ் நாடு மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள எல்லா சபை விசுவாசிகள் மற்றும் ஊழியர்களுமே இந்த ஊழியத்தினைத் தாங்கினால் மொத்த பீல் மக்களையும் இரட்சிப்பிற்குள் கொண்டு வரலாம். இது ஷாலோம் ஊழியம் மட்டுமல்ல, இங்கு வந்து நேரடியாகப் பார்த்தால் இந்த ஊழியம் இந்தியாவிலுள்ள அனைவரும் உதவி செய்து தாங்கக் கூடிய ஊழியமாகும். பீல் மக்கள் மத்தியில் ஊழியம் தொடர்ந்து நடைபெற நமக்குத் திராணி இருக்கும்போதே உதவி செய்வோம். தேவன் நம்மை மென்மேலும் உயர்த்தி ஆசீர்வதிப்பார்.

பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தைப் பார்வையிட அனுமதித்த நமது பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்தாரை கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக. அங்கு நான் செல்லும்படியாக ஏற்பாடு செய்த தலைமை அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்களுக்கும், குஜராத்தில் என்னோடு வந்து மொழிபெயர்ப்பு மற்றும் இதர உதவிகள் செய்த சகோதரர்கள் **ஜெயராஜ், கேரட், சாமுவேல், ஃபிராங்ளின், ஜெபா, பிரபு, ராஜேஷ், டேனியல்** ஆகியோருக்கு எனது நன்றியும் வாழ்த்துக்களும் பற்பல!



# பீல் ஆதிவாசி மாணவர்

## பராமரிப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **புரா குண்டியா** |
| தந்தையின் பெயர் | : | தும்சிங் குண்டியா |
| தாயார் பெயர் | : | தும்மா குண்டியா |
| பிறந்த நாள் | : | 21.05.2004 |
| படிக்கும் வகுப்பு | : | 3ம் வகுப்பு |
| சொந்த ஊர் | : | நெகடியா |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

### மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. தும்சிங் குண்டியா இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது சகோதரர்தான் கிறிஸ்துவை முதலாவதாக ஏற்றுக் கொண்டவர். பின்பு இவரையும் ஆலய ஆராதனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு கிறிஸ்துவின் திருவசனங்களைக் கேட்டபோது. இவருக்குள் தான் ஒரு பாவி என்கிற உணர்வு ஏற்படவே, தன்னை முற்றிலுமாக ஒப்புக் கொடுத்து பாவ மன்னிப்பினைப் பெற்று கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் தனது முழு குடும்பத்தோடு, ஆலயத்திற்கும் தொடர்ந்து வருகின்றார்.

**மாணவனைக் குறித்து :–** புரா கீழ்ப்படிதலுள்ள நல்ல மாணவன்.

**ஜெபியுங்கள்:–** இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற வேலைகளுக்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mr. S.W. Ravichandran - Thoothukudi***

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 249 மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப் படுகிறார்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக அறிமுகப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். ***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம்.

# ஷாலோம் மிஷனெரிப் பிரதிஷ்டை – 19.02.2013

## C.S.I. பரி. பேதுரு ஆலயம், பாளையங்கோட்டை






கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக! குஜராத், இராஜஸ்தான் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி ஜனங்கள் சுவிசேஷத்தினைக் கேட்டு மனம்திரும்பி ஆண்டவரண்டை வருகின்றனர். அவர்களில் ஊழிய அழைப்பினைப் பெற்றவர்கள் அதற்கான பயிற்சிகளைப் பெற்று தமிழ்நாட்டிற்குக் கடந்து வந்து நம் ஷாலோம் மிஷன் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு அவரவர் மாநிலங்களுக்குச் சென்று, வல்லமையாக ஊழியம் செய்து வருகின்றார்.

கடந்த 17.02.2013 அன்று பாளையங்கோட்டை NGO B காலனியில் உள்ள CSI தூய பேதுரு தேவாலயத்தில் வைத்து மிஷனெரிப் பிரதிஷ்டை ஆராதனை நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்கள். இந்த பிரதிஷ்டை ஆராதனையில் ஐந்து ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். சகோதரி மங்ளிபேன் அவர்கள் சாட்சி கொடுக்க சகோ. சாம் குணசீலன் (தலைமை அலுவலகம்) அவர்கள் மொழிப் பெயர்த்தார்கள். Rev. Mrs. சோபனா அவர்கள் ஐந்து மிஷனெரிகளையும் பிரதிஷ்டை செய்து தேவ செய்தியளித்தார்கள்.

மேலும் இந்த பிரதிஷ்டைக்கு முழு ஒத்துழைப்புத் தந்த சபைக்குரு Rev. Dr. பிரே S. ஜேம்ஸ், சபை ஊழியர் திரு. S. அகஸ்டின் மற்றும் மிஷனெரி குடும்பங்களைத் தாங்க முன் வந்த ஆதரவாளர்கள், இந்த பிரதிஷ்டைக்காக பிரயாசப்பட்டு உழைத்த நமது ஷாலோம் செயற்குழு உறுப்பினர் Prof. C.S. கிறிஸ்டோபர் போன்றோர்களுக்காகத் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

### பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள்

1. சகோதரி. மங்ளி பேன், கூட்டாயா, ம.பி – Mrs. சுகன்யா ஜோசப்
2. சகோ. தோளியா பார்கி, நாகன் கேடி, ம.பி – Mr. ராஜா மான்சிங்
3. சகோ. கிர்த்தன் அமளியார், காப்பிரியா, குஜராத் – Mr. டேவிட் ஞானசேகர்
4. ஹக்குலால் டின்டோர், ஜெகோடியா நாத்தா, இராஜ. – Mr. A. செல்வின் சாமுவேல்
5. சகோ. சோகன்லால் கல்லாரா, கரோடா, இராஜ. – Mr. குமார் ஜெயராஜ்

மேற்கண்ட ஆதரவாளர்களைத் தேவன் ஒவ்வொரு நாளும் பாதுகாத்து வழி நடத்துவாராக! தொடர்ந்து ஜெபிப்போம், தேவன் தாமே பெரியக்காரியங்களைச் செய்வார்.

## 10ம் மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்கான சிறப்புப் பிரார்த்தனை


சிறப்புச் செய்தி : பிஷப் தேவதாஸ் அவர்கள்



சிறப்புச் செய்தி : சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்


ஆலோசனைகள் : சகோ. டைட்டஸ் & சகோதரி மெர்லின் டைட்டஸ்



பாடல் மற்றும் ஆராதனை வேளை



கூடியிருந்த மாணவ – மாணவியர்

## பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான கல்விச் சுற்றுலா




ஹிரோலா Commpassion மாணவர்கள்





ஜெரி Commpassion மாணவர்கள்

## சமுதாய மறுரூபமாக்கல் பயிற்சி மற்றும் பட்டமளிப்பு






## ஷாலோம் 10 லட்சம் ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டங்களில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் சில...



பெயர் : **மீத்தா மக்வானா,** வயது : 55

ஊர் : பாடல்வா, மத்தியப்பிரதேசம்

எனக்கு 15 வருடமாக வயிற்றில் கட்டி இருந்தது. இதற்கென மருத்துவம் பார்த்தும், அநேக மந்திரவாதிகளிடம் சென்று ஆடு, கோழி, ஆகியவற்றைப் பலி கொடுத்தும் எனக்கு குணமாகவில்லை. எனது கணவரும் இனி மேல் ஒரு பைசா கூட செலவு செய்ய முடியாது என்று கைவிட்டுவிட்டார். நான் இப்படியே வியாதியோடு இருந்து செத்து விட வேண்டியது தான் என்று நினைத்த போது, எனக்குத் தெரிந்த சகோதரி. கசு பேன் இயேசுவைப் பற்றி சொல்லி என்னை பாடல்வா கிராம ஆலயத்தில் நடக்கும் சுகமளிக்கும் கூட்டத்திற்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கு போதகர். மத்தூர் புரியா அவர்கள் தேவ செய்தியளித்து ஜெபித்தார்கள். உடனே எனது வயிற்றில் இருந்த கட்டி மறைந்தது. மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி நன்றி! எனக்கு தேவன் செய்த அற்புதத்தின் விளைவாக எனது கணவர் மற்றும் பிள்ளைகளும் இப்பொழுது இயேசு தான் உண்மையான தேவன் என்று விசுவாசித்து என்னோடு குடும்பமாக ஆலயத்திற்கு வருகிறார்கள்.



பெயர் : **ஹிராபாய் டின்டோட்,** வயது : 62

ஊர் : பிப்லோட், குஜராத்

நான் 1 வருடத்திற்கு முன்பு ஜாலோத் என்ற இடத்திலுள்ள பஜாருக்கு சென்றிருந்த போது அங்குள்ள சாலையில் நடந்து கொண்டிருந்தேன அப்போது திடீரென்று கை மற்றும் கால்களில் வலி ஏற்பட்டு, அவைகள் செயல்படாமல் நின்றுவிட்டன. அருகில் இருந்தவர்கள் என்னை மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கு சிகிச்சைகள் மேற்கொண்டும் எனக்கு குணமாகவில்லை. ஆகவே, பிரபலமான மந்திரவாதிகளிடம் சென்று அங்கு 2 மாதம் தங்கியிருந்து என்னென்னமோ செய்தும் ஒன்றும் சரியாகவில்லை. அதன் பின் எனது ஊருக்கு அருகிலுள்ள மல்வாசி கிராமத்தில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு என்னைக் கூட்டிச்சென்றார்கள். அங்கு மத்தியப்பிரதேசத்திருந்து போதகர். ரமேஷ் பி. வாசுனியா அவர்கள் வியாதியஸ்தர்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுத்தார்கள். அப்பொழுது என் மீது ஒரு வல்லமை இறங்குவதை உணர்ந்தேன். உடனே எனது கை, கால்கள் சுகமானது. தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அவருக்கே மகிமையைச் செலுத்துகிறேன்!

## மிஷனெரித் தரிசனக் கூடுகை – மார்த்தாண்டம் (24.02.2013)



பாடல் மற்றும் ஆராதனை வேளை



தேவச் செய்தி : பிஷப் தேவதாஸ் அவர்கள்



சாட்சி பகரும் மிஷனெரிகள்




பணித்தளச் செய்தி : சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



பிரதிஷ்டை செய்யப்படும் மிஷனெரிகள்



கூடியிருந்த தேவ ஜனங்கள்

## ஷாலோம் மிஷனெரிப் பிரதிஷ்டை – 24.02.2013

C.S.I. ஆலயம், விரிகோடு



பிரதிஷ்டை செய்யப்படும் மிஷனெரிகள்



சபைப் போதகர் மற்றும் ஆதரவாளர்களுடன் மிஷனெரிகள்

## மிஷனெரித் தரிசனக் கூடுகை – மார்த்தாண்டம் (24.02.2013)

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! தேவக் கிருபையினாலும் அவரின் இரக்கத்தினாலும் கடந்த 24.02.2013 அன்று மார்தாண்டம் சிங்ளேயர் ஹாலில் வைத்து **Rev. A. வில்லியம் தாமஸ்** அவர்கள் தலைமையில் மிஷனெரித் தரிசனக் கூடுகை நடைபெற்றது. பாடல் மற்றும் ஆராதனை வேளையை சாரோன் பாடல் குழுவினர் நடத்தினர். தேவச் செய்தியை நமது ஷாலோம் **பிஷப் தேவதாஸ்** அவர்களும், பணித்தளச் செய்தியினை **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களும் கொடுத்தார்கள்.

நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் தங்களது சாட்சிகளைப் பகர அதை **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் தமிழாக்கம் செய்தார்கள். அதன்பின் அந்த நான்கு ஊழியர்களும், **Rev. P. ஆமோஸ்** அவர்கள் மற்றும் பல தேவ மனிதர்கள் முன்னிலையில் **பிரதிஷ்டை** செய்யப்பட்டார்கள். மேலும் **Rev. P. ஆமோஸ்,** A.G. சபை, மார்த்தாண்டம்), **Rev. ஜெயா கார்னிஸ்,** (விரிகோடு CSI) **Rev. P. ஏசுதாசன்,** (A.G. சபை, திருவட்டார்), **Bro. சுந்தர்ராஜ்,** (பயணம்), ஆகியோர் நமது ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிட்ட அனுபவங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டனர்.

பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்களைத் தாங்க முன்வந்த ஆதரவாளர்கள், இந்தக் கூடுகைக்காக ஜெபித்து உழைத்த அனைத்து ஆதரவாளர்கள், தன்னார்வலர்கள் அனைவருக்கும் ஷாலோம் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். மிஷனெரிகள் மற்றும் ஆதரவாளர்களின் விபரங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| 1. **சகோ. மக்கன்லால் H. சர்போட்டா**, சோபாவட்டி, இராஜ் | – **Mr. ஜோயல்சன்,** K.K. Dist |
| 2. **சகோ. சங்கலால் கராடி**, வாடா, இராஜ் | – **Pr. ராகவன்,** K.K. Dist |
| 3. **சகோ. சோஹன்லால் கட்டாரா**, கான்கட், இராஜ் | – **Mr. லாரன்ஸ்,** K.K. Dist |
| 4. **சகோ. பாபுலால் மேடா**, பாட் பம்மரியா, இராஜ் | – **Mr. ஜஸ்டின்,** K.K. Dist |

பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த ஊழியர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். தேவன் தாமே பெரியக் காரியங்களைச் செய்வார்.

---

### ஞாயிறு ஆராதனை – புதியம்புத்தூர் (10.03.2013)

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! கடந்த 10.03.2013 ஞாயிறு காலை புதியம்புத்தூரிலுள்ள **CSI தூய யோவான் தேவாலயத்தில்** நடைபெற்ற துதி ஆராதனையில் நம் ஷாலோம் ஊழியர்கள் கலந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தார். துதி ஆராதனையை **சகோ. ஆலன்** அவர்கள் நடத்த தேவ செய்தியினை **சகோ. ரத்திஸ்** அவர்கள் வழங்கினார்கள். நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து தூத்துக்குடி தலைமை அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இந்த ஆராதனையில் நமது ஊழியர்களை அன்புடன் பயன்படுத்திய சபைக் குரு **Rev. Dr. P. செல்லப்பா** அவர்களுக்கு ஷாலோம் ஊழியத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மிஷனெரித் தரிசனக் கூடுகை & மிஷனெரிப் பிரதிஷ்டை

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! கடந்த 23.02.2013 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு விரிகோடு CSI தேவாலயத்தில் நடந்த மிஷனெரித் தரிசனக் கூடுகையிலும், 24.02.2013 ஞாயிறு அன்று இதே ஆலயத்தில் நடைபெற்ற மிஷனெரிப் பிரதிஷ்டை ஆராதனையிலும் நமது **பிஷப் தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியளித்ததுடன் நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விவரித்துக் கூறியதுடன் இந்த ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் தங்களது சாட்சிகளைப் பகர அதை **பிஷப் தேவதாஸ்** அவர்கள் தமிழாக்கமும் செய்தார்கள். அதன்பின் அந்த இரண்டு மிஷனெரிகளும், போதகர் **Rev. ஜெயா கார்னிஸ்** அவர்கள் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த மிஷனெரிகளைத் தாங்க முன்வந்த ஆதரவாளர்களுக்கும் இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்துதந்த **சகோ. செல்வதுரை** அவர்களுக்கும், ஆலயப் போதகர் **Rev. ஜெயா கார்னிஸ்** அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்களின் விபரங்கள் பின்வருமாறு :

1. **Evg. ராஜு டாமோர்,** (கக்ரியா, குஜராத்) CSI Men's Fellowship - விரிகோடு
2. **Evg. பாரேஸ் பில்வாள்,** (அஜ்நெர், மத்தியப்பிரதேசம்) CSI Church - விரிகோடு

தொடர்ந்து இவர்களுக்காக ஜெபித்துத் தாங்குங்கள். ***தேவன் உங்களை உயர்த்துவார்.***

## சபைகளில் சாட்சி பகர்ந்த மிஷனெரிகள்!

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து கடந்து வந்த மிஷனெரிகளுடன் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் கடந்த 24.02.2013 ஞாயிறு அன்று காலை 8 மணியளவில் கோடியூர் CSI தேவாலயத்திலும், தொடர்ந்து காலை 10 மணிக்கு மார்த்தாண்டம் AG சபையிலும் கலந்து கொண்டு தேவ செய்தியளித்ததுடன், மிஷனெரிகள் சாட்சி கொடுக்க மொழியாக்கமும் செய்தார்கள்.

மேலும் குப்பத்துரையிலுள்ள CSI தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் **சகோ. ஆலன்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். நமது மிஷனெரிகள் அளித்த சாட்சியினை **சகோ. டேவிட்** அவர்கள் மொழியாக்கம் செய்ததோடு, ஷாலோம் ஊழியங்களைப் பற்றியும் எடுத்து விளக்கிக் கூறினார்கள். நிகழ்ச்சிகளை **சகோ. செல்வதுரை** அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். கோடியூர் CSI தேவாலயப் போதகர் Rev. **ஸ்மைல்,** AG சபைப் போதகர் Rev. P. **ஆமோஸ்,** குப்பத்துரை CSI தேவாலயப் போதகர் **Rev. வின்செண்ட் ராபர்ட்** ஆகியோருக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# 10ம் மற்றும் 12ம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதும் பீல் மாணவ - மாணவியருக்கான சிறப்புப் பிரார்த்தனைக் கூடுகை



கர்த்தருடைய பெரிதான கிருபையால் 10ம், 12ம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்கும் மற்றும் கல்லூரியில் தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்கும் விசேஷித்த பிரார்த்தனைக் கூடுகை நடத்தப்பட்டது.

குஜராத்திலுள்ளவர்களுக்கு 10ம் தேதியும், மத்தியப்பிரதேசத்திலுள்ளவர்களுக்கு 17ம் தேதியும், இராஜஸ்தானிலுள்ளவர்களுக்கு 3ம் தேதியும் சிறப்புப் பிரார்த்தனைகள் நடைபெற்றது. இந்த 3 கூடுகையில் சுமார் 900 மாணவ மாணவியர் பங்குபெற்றனர்.

இக்கூடுகையின் துதி ஆராதனையை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ. ஃப்ராங்ளின்** ஆகியோர் இணைந்து நடத்தினார்கள். கூடுகையில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் மிகுந்த உற்சாகத்துடன் நடனமாடித் தேவனை துதித்து ஆராதித்தார்கள். ஆராதனை வேளையில் ஆவியானவர் பலத்த வல்லமையோடு அனைவர் மீதும் இறங்கியதால் கர்த்தருடைய மகிமை வெளிப்பட்டது. கடந்த வருடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபெற்ற மாணவர்களில் 70% 80% 90% மதிப்பெண்கள் எடுத்தவர்கள் இந்த கூடுகையில் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின் டைட்டஸ்** ஆகியோர் மாணவர்களுக்கு தங்கள் அனுபவங்களுடன் கூடிய ஆலோசனையை வழங்கினார்கள். குஜராத் மாணவர்களுக்கு **சகோ. தேவதாஸ்** அவர்களும், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாணவர்களுக்கு **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் தேவசெய்தியை வழங்கினார்கள். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும் என்ற வசனத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட தேவ செய்தியை அனைவரும் கேட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

தேவ வார்த்தையைக் கேட்டவுடன் தேர்வைக் குறித்து தங்களுக்குள் இருந்த பயம் விலகி, தைரியம் கிடைத்ததையும் மாணவ மாணவிகள் உணர்ந்தார்கள். அதன்பின்பு தேர்வுக்கென்று எப்படியெல்லாம் ஆயத்தப்படவேண்டும் என்று விளக்கமான ஆலோசனைகள் கொடுக்கப்பட்டு அனைவருக்கும் தனித்தனியே கரங்களை வைத்து விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

பரீட்சை எழுதுகிற ஒவ்வொரு மாணவ – மாணவிகளுக்கும் ஜெபித்து பேனா மற்றும் வேதாகம வசன ஸ்டிக்கர் சாக்லெட் வழங்கப்பட்டது. மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. அனைவரும் தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் சென்றார்கள். இவர்களுக்காக நாம் யாவரும் கர்த்தரிடம் ஜெபித்துக் கொள்வோம். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## ஞாயிறு ஆராதனை – ராஜபாண்டி நகர் (17.02.2013)

கடந்த **17.02.2013** ஞாயிறு அன்று, தூத்துக்குடி, ராஜபாண்டி நகரிலுள்ள இயேசுவின் கிருபை ஜெபவீடு சபையின் காலை ஆராதனையில் நமது அன்பு பகிர்வு இயக்கத்தின் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதில் **சகோ. ரத்தீஸ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளைகளை நடத்தினார்கள். **சகோ. ஆலன்** அவர்கள், கட்டுவது/கட்டவிழ்ப்பது என்ற தலைப்பில் தேவ செய்தியினைக் கொடுத்து ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விளக்கினார்.

சபை ஆராதனை நிறைவுற்றதும், நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் **சகோ. ரத்தீஸ்** அவர்கள் **"பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்"** எபே. 6 : 11 – என்ற வசனத்தினைக் கொண்டு வாலிபர்களுக்கு சிறப்புச் செய்தியையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

நமது ஷாலோம் ஊழிர்களை வரவேற்று சபையில் பயன்படுத்தி பணித்தள ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ள அனுமதித்த சபைப் போதகர் **Pr. வெலிங்டன்** அவர்களுக்கு ஷாலோம் ஊழியத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

---

### FORM IV

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadoss |
| 7. | Address | : | 5/168, Caldwell Colony,<br>3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadoss |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd - V. Devadoss

Date : 30.03.2013 Signature of Publisher

கர்த்தருடைய கிருபையால் ஷாலோம் ஊழியம் Seva Bharat என்ற ஸ்தாபனத்தின் மூலம் ICT Programme (Institute of Community Transformation)-யை எடுத்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு Programme-மிலும் 10 சுதேச ஊழியர்களை எடுத்து அவர்களுக்கு ஒரு வருடம் வேதாகமப் பயிற்சியும், ஊழியப் பயிற்சியும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குரிய தேவைகளையும் அவர்கள் சந்தித்து உற்சாகப்படுத்தி அந்த 1 வருட காலத்துக்குள் சுமார் 800 பேருக்காவது சுவிசேஷம் அறிவித்து, ஞானஸ்நானம் கொடுத்து ஒரு சபையை உருவாக்கிவிட வேண்டும் என்பது அதின் முக்கியமான நோக்கமாகும்.

கடந்த ஆண்டில் (2012) மத்தியப்பிரதேசத்தில் 2 ICT Programme நடத்தப்பட்டது. ஒன்று ஜாபுவா பகுதிக்கும், மற்றொன்று மேக்நகர் பகுதிக்கும் கொடுத்தார்கள். இதில் 20 சுதேச ஊழியர்கள் பயிற்சி பெற்று, பணித்தளங்களில் ஆத்தும ஆதாயம் செய்துள்ளார்கள். இவர்கள் 20 பேருக்கும் மத்தியப்பிரதேசம் போபாலில் வைத்து பட்டமளிப்பு விழா 2013 பிப்ரவரி 21, 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இதில் 2 நாட்கள் விசேஷ வகுப்புகளும், கடைசிநாளில் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றது. **சகோ. ஜெயராஜ்** அவர்கள் இந்த ஊழியர்களை பொறுப்பாக அழைத்துச் சென்று பட்டமளிப்பு விழாவில் பங்குபெறச் செய்து 20 ஊழியர்களும் சான்றிதழ்கள் பெறவும் உதவியாக இருந்தார். இந்த கிருபைகளைக் கொடுத்த தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்.



## ***மிஷனெரித் தரிசனக் கூட்டங்கள்***

கர்த்தருக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே! தேவ ஊழியர்களே! ஷாலோம் மிஷன் சார்பாக உங்களை வாழ்த்துகிறோம். உங்களது சபைகளில் நடக்கும், உபவாசக் கூடுகை, முழு இரவு ஜெபங்கள், ஜெபக்குழுக்களின் மூலமாக நடக்கும் பல்வேறு கூட்டங்கள் மற்றும் திருச்சபை ஆராதனைகள், மிஷனெரி வீடியோ படக்காட்சிகள் போன்றவற்றை எந்த சபைப் பாகுபாடுமின்றி உங்கள் மத்தியில் கடந்து வந்து தேவ ஆசீர்வாதத்துடன் நடத்தித் தர ஆயத்தமாயிருக்கிறோம்.



இது நிச்சயம் உங்களுக்கும் நீங்கள் செய்து வரும் தேவ ஊழியங்களுக்கும் மிக ஆசீர்வாதமாக இருக்கும். மேலும் நாங்கள் காண்பிக்கும் மிஷனெரி வீடியோ படக்காட்சிகள் உங்களின் சபை மக்களுக்குள் ஆத்துமப் பாரத்தினைக் கண்டிப்பாக உண்டாக்கும். ஜெபித்து எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

தொடர்புக்கு : **சகோ. சாம் குணசீலன்**, மேலாளர், செல் : 09345675468

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

## Yôd Ï jRjR BºoYôR ù_Td áÓûL

| | |
|---|---|
| நாள் : **01.04.2013 (திங்கள்)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் | நேரம் |
|---|---|
| **20.04.2013 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **13.04.2013, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

# CBC (VBS)
# சிறுவர் வேதாகம வகுப்பு - 2013


பிரியமானவர்களே, நமது ஷாலோம் பணித்தளங்களிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருகிறார். மேலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்த சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2012ஆம் ஆண்டில் **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பில் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் 30000 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளுக்கு உதவி வரும் வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டு **"என் நண்பன் – இயேசு"** என்கிற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், 30000 CBC புத்தகங்கள், Badge. (30000), பாட்டுப் புத்தகங்கள் (10,000), கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 10/– வீதம் 30000 மாணவர்களுக்கு ரூ. 3 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ **ஒரு மாணவருக்கு ரூ. 10/– வீதம்** உங்களால் முடிந்த அளவிலான மாணவர்களுக்குக் கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

**தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின்**
**பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!**




CBC பயிற்சிப் புத்தகங்கள்

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;"**
மத்தேயு 19:14

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்...

## குஜராத் மாநிலம்

**சகோ. பட்சு பபேரியா** **ரசரதா**

எங்கள் கிராமத்தில் பெருலாபாய் என்ற சகோதரர் பல வருடங்களாக ஆஸ்துமா வியாதியினால் கஷ்டப்பட்டு வந்தார். விடுதலைக்காக கிராம சபை ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவ அற்புதத்தால் இவரின் நோய் குணமாகியது.

**சகோ. பாரத் டாமோர்** **தோலாககர்ா**

சங்கீதா பேன் என்ற சகோதரி 10 ஆண்டுகளாக குழந்தைப் பாக்கியமில்லாத காரணத்தினால், மனமுடைந்து கவலையோடு நமது சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாக ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**சகோ. சந்து டாமோர்** **ஹடுமத் கூட்டா**

இந்தக் கிராமத்தில் சாம்பாய் என்ற 4 வயது சிறுவன் சுவாசக் கோளாரினால், சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டு, நம்பிக்கையோடு சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாய் சுவாசத் தடைகளை மாற்றி பூரண விடுதலையைக் கொடுத்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**சகோ. பாதர் டோடியார்** **பேடவ் நாத்**

ரங்ஜி என்ற சகோதரர் பக்கவாதத்தினால் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு வந்தார். இறுதியாக சபைக்கு வந்து ஜெபித்தபோது, தேவன் உடனே பக்கவாத நோயை நீக்கி அற்புதம் செய்தார்.

**சகோ. கோர்சிங் R. டாமோர்** **புரக்குவா**

புரக்குவா கிராமத்தில் ரூத்ரி என்ற சகோதரர் 12 வருடங்களாக பிசாசின் பிடியினால் அவதிப்பட்டு வந்தார். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து சபைக்கு வந்து ஜெபித்த போது, தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**சகோ. சவல் H. டோடியார்** **களியாபீத்**

களியாபீத் கிராமத்தில் கமலா பேன் என்ற சகோதரி கேன்சர் வியாதியினால் பல வருடங்களாக கஷ்டப்பட்டு, அநேக வைத்தியங்கள் செய்தும் குணமாகாமல் இறுதியில் கிறிஸ்து இயேசுவை விசுவாசித்து நம் சபைக்கு வந்து ஜெபித்தபோது, தேவன் அற்புதமாக கேன்சர் வியாதியிலிருந்து சுகம் கொடுத்தார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**சகோ. காலு F. சோலங்கி** **டென்சா**

டென்சா கிராமத்தில் ஜாலாபாய் என்ற சகோதரர் பல ஆண்டுகளாக குடிப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற மன வாஞ்சையுடன் சபைக்கு வந்து ஜெபித்த போது தேவன் குடிப்பழக்த்திலிருந்து விடுதலை கொடுத்தார்.

**சகோ. பாரேஸ் பில்வால்** **அஜ்னெர்**

அஜ்னெர் கிராமத்தைச் சேர்ந்த முகேஷ் பாய் என்ற சகோதரரை பாம்பு கடித்துவிட்டது. ஆபத்தான நிலையில் நமது சபைக்கு விசுவாசத்தோடு வந்து ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார்

**சகோ. பாரியா மச்சார்** **காக்ரதாரா**

காக்ரதாரா கிராமத்தைச் சேர்ந்த தார்சிங் என்ற சகோதரர் 8 ஆண்டுகளாக பிசாசின் பிடியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்த நிலையில் இவருக்காக நமது சபையில் ஊக்கமாக ஜெபித்த போது தேவன் இவருக்கு பிசாசின் பிடியிலிருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார்.

## ஷாலோம் 10 லட்சம் ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டங்களில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் சில...

**பெயர் : தாருபாய் லாலாபாய், வயது : 34**
**ஊர் : கட்லாவ், குஜராத்**



எனது பெயர் தாருபாய். எனக்கு பல மாதங்களாக இடுப்பு வலி இருந்தது. நான் உட்காரவோ, எழுந்திருக்கவோ மிகவும் கஷ்டப்படுவேன். என்னால் 30 அடிக்கு மேல் நடக்க முடியாது உடனே நின்று விடுவேன், பிறகு 5 அல்லது 10 நிமிடங்களுக்குப் பிறகு தான் என்னால் நடக்க முடியும். இப்படியாக மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இந்நிலையில் கட்லாவ் கிராமத்தில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் போதகர்.சந்து டாமோர் அவர்கள் வந்து சிறப்பு தேவ செய்தியையும் ஜெபத்தையும் ஏறெடுத்தார்கள். ஜெபத்தின் போது தேவன் என்னைத் தொட்டு சுகமாக்கினார். இப்பொழுது என்னால் நன்றாக உட்காரவும் எழுந்திருக்கவும் நடக்கவும் முடிகிறது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**பெயர் : மடிபேன், வயது : 48**
**ஊர் : ஜெரி, குஜராத்**



எனது பெயர் மடிபேன். எனது வயிற்றில் சில வருடங்களுக்கு முன்பு சிறிய அளவில் கட்டி ஒன்று இருந்தது. அது நாளடைவில் பெரிதாகி விட்டது. இதனால் என்னால் சரியாக சாப்பிடவும் தூங்கவும் முடியாமல் வேதனையோடு இருந்தேன். அதோடு கூட நான் உதிரப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். சரீரம் முழுவதும் மிகவும் பெலவீனமாகக் காணப்பட்டது. இதற்கென பல மந்திரவாதிகளிடமும் மருத்துவர்களிடமும் சென்றும் சுமார் 75,000 ரூபாய் செலவு செய்தும் குணமாகவில்லை. அப்போது ஜெரி கிராமத்தில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் நான் விசுவாசத்தோடு பங்கு பெற்றேன். அங்கு வியாதியஸ்தருக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. நானும் விசுவாசத்தோடு ஜெபம் பண்ணினேன். எனது வயிற்றில் இருந்த கட்டி மறைந்து போனது, அதோடு எனது உதிரப்போக்கும் நின்று விட்டது. எனக்கு சுகம் கொடுத்த இயேசுவுக்கு நன்றி!




**பிரியமானவர்களே !**

நமது மாத இதழில் இம் மாதம் முதல் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வேதவினாப் போட்டி நடத்துகிறோம்.

***பங்கு பெற்று பரிசுகளைத் தட்டிச் செல்லுங்கள் !***

**(வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து)**

1. இயேசு கிறிஸ்து தேவனுக்கு முன்பாக நம்மை யாராக ஆக்கினார்?
2. மரணத்திற்கும் பாதாளத்திற்கும் திறவு கோல்களை வைத்திருக்கிறவர் யார்?
3. வானத்திலுள்ள சிங்காசனங்களில் உட்கார்ந்திருந்தவர்கள் யார்?
4. தங்கள் வஸ்திரங்களை அசுத்தபடுத்தாத சிலபேர் எந்த சபையில் இருக்கிறார்கள்
5. ஊழியத்திலும் விசுவாசத்திலும் அதிகமான சபை எது?
6. சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தவரின் வலது கரத்திலுள்ள புஸ்தகத்தை வாங்கியது யார்?
7. தன்னைத் தீர்க்கத்தரிசியென சொல்லுகிற ஸ்திரியின் பெயர் என்ன?
8. அந்திப்பா கொல்லப்பட்ட நாட்களிலும் இயேசுவை மறுதலியாமலிருந்த சபை எது?
9. ஏழு குத்துவிளக்குகள் எவற்றை குறிக்கின்றன?
10. யோவனுக்கு வெளிப்படுத்தல் எங்கே உண்டானது?



---

1. விடைகள் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கொடுக்கப்பட்ட கேள்விகளை எழுதாமல் பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கள் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகள் எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.04.2013**


**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# B pToh Ñ®hNo

*“ஆப்பிரிக்காவின் மருத்துவ மிஷனெரி”*



**எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்.** (1கொரிந்தியர் 4 :1)

ஆல்பர்ட் சுவிட்சர் 1875 ஆம் ஆண்டு, ஜனவரி 14–ம் தேதி ஜெர்மனியில் அல்ஸேஸ் –ல் உள்ள ஸ்டிராஸ் போர்ஹ் என்ற பட்டணத்தில் அல்சேஷன் குடும்பத்தில் பிறந்தார். அந்தக் குடும்பம் தலைமுறை தலைமுறையாகத் தேவபக்தியிலும் இசையிலும் கல்வியிலும் சிறந்து விளங்கித் தங்களை அதற்கென்று அர்ப்பணித்திருந்தது. அவருடைய தகப்பனார் லுத்தரன் போதகர். அவருடைய அப்பாவின் அப்பாவும், அம்மாவின் அப்பாவும் சிறந்த இசையாளர்கள். சுவிட்சர் மக்களுக்காக எண்ணத்திலும் செயலிலும் உழைக்கத் தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்திருந்தார்.

சுவிட்சர் 1893ம் வருடம் வேதாகமக் கல்வியைப் பயில ஆரம்பித்தார். அவர் தனது இளம் வயதிலேயே சிறந்த இசையாளராகவும் ஆலயத்தில் போதகராகவும் தத்துவப் பாடத்தில் பட்டப்படிப்பு பெற்றவராகவும் விளங்கினார்.

சுவிட்சர் ஆர்கன், பியானோ இசைப்பதில் தன் சிறுவயதிலே மிகச் சிறந்தவராக விளங்கினார். தேசிய அளவிலே திறமை வாய்ந்தவர் என்ற பேர் பெற்றார். இசைப்பதின் மூலம் வருகின்ற வருமானத்தைத் தன்னுடைய கல்விக்காகவும் பின்பு மருத்துவத்துறைப் படிப்பிற்காகவும் ஆப்பிரிக்க மருத்துவமனைக்காகவும் செலவழித்தார்.

சுவிட்சர் நேரடியாக மக்களைச் சந்தித்து சேவை செய்ய மிகவும் ஆர்வம் கொண்டவர். 1904 ம் ஆண்டு பாரிஸ் மிஷனெரி ஸ்தாபனத்தின் வெளியீட்டிலுள்ள ஆப்பிரிக்காவின் பிரஞ்ச்கேபான் காலனியில் மருத்துவர்களின் உடனடித் தேவையின் செய்தியை அறிந்து, உடனே அர்ப்பணித்து அதற்கான வேலையை ஆரம்பித்தார். நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் இந்த செய்தியை வாசித்தபோதிலும **ஆல்பர்ட் சுவிட்சர்** மட்டும் தான் அசைக்கப்பட்டார்.

1905–ம் வருடம், அக்டோபர் மாதம் 13ம் தேதியில் அவர் தன்னுடைய பெற்றோருக்கும் சிநேகிதர்களுக்கும் தான் மருத்துவப் படிப்பில் சேர்ந்துபடித்து ஆப்பிரிக்கா செல்ல வேண்டும் என்ற முடிவை கடிதங்கள் மூலம் தெரிவித்தனர். தன்னுடைய வேலையை இசையின் மூலமாகவோ தத்துவங்களின் மூலமாகவோ அல்லது போதகராகவோ அல்ல, மருத்துவத்தின் மூலமாகச் செய்ய அர்ப்பணித்ததாகவும் மருத்துவத்தைப் படிப்பதற்கு காரணமே இந்த அன்பின் சத்தியத்தை பேசுவதின் மூலமாக அல்ல கிரியைகளின் மூலமாக காண்பிக்கவே இந்த புதிய முறையைத் தெரிந்தெடுத்தாகவும் எழுதினார்.

அவர் எழுதின கடிதங்களுக்கு பயமுறுத்தல்களும் ஆச்சரியங்களும் அதிர்ச்சிகளுமான பதில்கள் வந்தன. அவருடைய தந்தையும் தான் ஏமாற்றமடைந்ததாக வெளிப்படுத்தினார். அவருடைய குடும்பத்தார் அவர் செய்தது ஒரு முட்டாள்த்தனமான காரியம் என்று பேசினார்கள். இந்த எல்லா எதிர்ப்புகளின் மத்தியிலும் , 1905ம் வருடம் ஜனவரி மாதம் தனது 30வது வயதில் ஆல்பர்ட் சுவிட்சர் மருத்துவம் படிக்க ஆரம்பித்தார். ஸ்டிராஸ்பர்க் என்ற பல்கலைக்கழகத்தில் படித்து, 1913ம் வருடம் பட்டத்தைப் பெற்றார்.

1913ம் வருடம் சுவிட்சரும் நர்ஸான அவருடைய மனைவி ஹெலினி பிரஸ்லான் இருவரும் ஆப்பிரிக்காவிலுள்ள லம்பாரின் என்ற இடத்தில் மருத்துவமனையை நிறுவினர். பல்லாயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்களுக்கு உதவியாக இது ஒரு பெரிய மருத்துவமனையாக விளங்கியது. அது மட்டுமல்லாமல் 150 மைல்களுக்கு உள்ளே, உலகத்திலேயே மோசமான தட்பவெப்பநிலையைக் கொண்ட,மிகவும் தேவையோடு இருந்த இடத்திற்கும் மருத்துவ உதவி கொடுப்பதற்காக தன்னுடைய வாழ்க்கையையே தியாகம் செய்தார்.

முதல் உலகப்போர் வந்தபோது, 1917ம் வருடம் ஆல்பர்ட்டும் அவருடைய மனைவியும் கைதிகளாக முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 1918ம் வருடம் விடுதலையாக்கப்பட்டு, தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். அப்பொழுது அவர்களுக்கு 1919 ம் வருடம் ஜனவரி மாதம் ரீனா பிறந்தாள். சுவிட்சர் தனது 78 வது வயதில் இன்னொரு உலகப் போரிலும் அதிகமாக சேவை செய்ததால் அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. அந்த நோபல் பரிசின் விலையில் அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி, குஷ்டரோகிகளுக்குக் காலனிகளைக் கட்டினார்.

தன்னுடைய தந்தையின் திறமையான காரியங்களைத் தனது சிறுவயதிலிருந்தே பார்த்துக் கொண்டிருந்த ரீனா, தானும் தன் தனப்பனுடன் ஆப்பிரிக்காவுக்குச் செல்ல தன்னை அர்ப்பணித்தாள். சுவிட்சர் தனது 90 வயது வரை மருத்துவமனையைக் கவனித்து வந்தார். அப்போது 72 கட்டடங்களும் 600 படுக்கைகளும் 6 மருத்துவர்களும் 35 செவிலியர்களும் இருந்தார்கள். இந்த மருத்துவமனையின் பொறுப்புகள் எல்லாவற்றையும் தன் மகள் ரீனாவிடம் கொடுத்தார். அவளும் தன் தகப்பனைப் போல் அர்ப்பணிப்போடும் தீவிர முயற்சியோடும் இந்த காரியங்களை நிறைவேற்றினாள்.

ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் என்ற நண்பர் சுவிட்சர் தனது பிரசங்கத்தினால் அல்ல தன் செயலினால் எண்ணிலடங்காத மக்களுக்கு ஆசீர்வதமாக இருந்தார் என்று கூறினார்.

ஆல்பர்ட் சுவிட்சர் தனது 90 வது வயதில் 1965 வது வருடம் லம்பாரீன் என்ற இடத்தில் இறந்தார். அவரும் அவரது மனைவியும் அங்கிருந்த மருத்துவமனை நிலத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இது போன்ற மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்றை தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நாம் படித்து வரும்போது கடந்த காலங்களில் மிஷனெரிகளின் பாடுகள், நம் மனத்தில் மிஷனெரி தாகத்தையும் ஊழிய வாஞ்சையையும் ஏற்படுத்துவதோடு நாமும் கூட கர்த்தருக்காக நம்மை அர்ப்பணிக்க தேவன் கிருபை செய்வார்.

# காணிக்கை அனுப்பும் வழிகள்

❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

❖ D.D. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.

❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

❖ **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப....***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

இஸ்ரோ என்றழைக்கப்படும் இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பின் பி.எஸ்.எல்.வி. சி 20 ராக்கெட் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்திலிருந்து கடந்த மாதம் விண்ணில் ஏவப்பட்டது. ஃபிரான்சு நாட்டு சிஎன் ஈஎஸ் எனப்படும் விண்வெளி ஆய்வமைப்புடன் இணைந்து இஸ்ரோ உருவாக்கியுள்ள இந்த சரள் எனப்படும் விணகலம் கடல் வளங்கள், பருவநிலை மாற்றத்தால் உயர்ந்து வரும் கடல் நீர் மட்டம் ஆகியவை குறித்து நடத்தப்படும் ஆய்வு பணிகளுக்கு உதவும்.

---

கடந்த மாதம் ஹைதராபாத்தில் மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கும் ஒரு பஸ் நிலையத்திலும், அடுத்ததாக சில நிமிட நேரத்தில், சினிமா அரங்கு ஒன்றிலும் ஏற்படுத்தப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 16 க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். 100க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

---

எச்.ஐ.வி. தொற்றுடன் பிறந்த பெண்குழந்தை ஒன்றின் உடலில் இருந்து அமெரிக்க விஞ்ஞானிகள் அந்த வைரஸை அகற்றியுள்ளனர். இது போல, பிறந்த குழந்தை ஒன்றின் உடலில் இருந்து எச்.ஐ.வி. வைரஸை அகற்றுவது இதுவே முதல் முறை என்றும், மனித உடலில் இருந்து எச்.ஐ.வி. வைரஸை அகற்றுவது என்பது இத்துடன் இரண்டாவது முறை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

---

ஆண்டிபயாடிக்ஸ் எனப்படும் நுண்ணுயிர் எதிரி மருந்துகளுக்கு நோய்க் கிருமிகள் பாதிக்கப்படாத தன்மை அதிகரித்துவருகின்றது. இது பயங்கரவாதத்தைவிட மேலும் பெரிய ஆபத்து என்று இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரி எச்சரித்துள்ளார். புதிய ஆண்டிபயாடிக் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் சாதாரணமாக நடத்தப்படும் அறுவை சிகிச்சைகள் கூட இன்னும் 20 ஆண்டுகளில் மிகவும் ஆபத்தானவையாகக் கூடும் என்று தலைமை மருத்துவ அதிகாரி கூறியுள்ளார்.

நன்றி : www.bbc.co.uk


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



# பனதா இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் குசல்கட் தாலுகாவில் மிகவும் பின்தங்கிய மலைப்பாங்கான, போக்கு வரத்து வசதி மிகவும் குறைவான கிராமம்தான் பனந்தா ஆகும். இங்குள்ள ஜனங்களுக்கு சாராயம் காய்ச்சி குடிப்பது, விற்பனை செய்வது மற்றும் திருடுவது இவைகள்தான் தொழிலாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. ஹரி சந்திர மேடா.

சகோ. ஹரி சந்திர மேடா அவர்களின் சிறுநீரகத்தில் கல் அடைப்பு நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. அநேக மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவம் பார்க்கவும், மந்திரவாதிகளை நாடி மந்திரக் கிரியைகள் செய்யவும் ரூ. 35 ஆயிரம் வரை செலவு செய்தார் ஆனாலும் குணமாகவில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இருந்த போதுதான் நமது ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. பகதூர் பாரியா அவர்களைக் குறித்து கேள்விப்பட்டு அவர்களிடம் ஜெபிக்கும்படியாக சென்றார். ஊழியரும் இவருக்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபத்தினைக் கேட்டு தேவன் கல் அடைப்பை நீக்கி அற்புத சுகத்தினைக் கொடுத்தார். இந்த அற்புத சுகத்தினைப் பெற்றுக் கொண்ட இவர் தனக்கு சுகம் தந்த இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் இணைந்தார்.

தேவன் இவரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, ஊழியம் செய்யும்படி அழைத்தார். அந்த அழைப்பினை ஏற்று ஊழியம் செய்யும்படி அர்ப்பணித்து ஷாலோமில் இணைந்து, 2001ம் ஆண்டு ஊழியப் பயிற்சி பெற்று, தனது கிராமத்தினை மையமாக வைத்து ஊழியத்தினை ஆரம்பித்தார். விசுவாசிகள் பெருகியதால் தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே, தனது சொந்த நிலத்தினை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்பட ரூ. 1.25 இலட்சம் செலவில், ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டு, 14.10.2012 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது இந்த சபையில் 53 குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர். தேவனுக்கே மகிமை!

இந்தக் கிராம ஆலயம் Pr. ஆமோஸ் A.G. சபை மார்த்தாண்டம் அவர்கள் மூலமாக வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 200 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**




# ஷாலோம்
# மிஷனெரித் தரிசன நேரம்

தூத்துக்குடி மாவட்டத்தில்

HOPE டி.வி.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

ஹெவன் Heaven tv

தேவச் செய்தியாளர்கள்

**Rt. Rev. Dr. V. தேவதாஸ்**
பேராயர், ஷாலோம் திருமண்டலம், குஜராத்

**Sis. வஹிதா தேவதாஸ்**
ஷாலோம், குஜராத்

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்**

**மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை**

**ஒளிபரப்பப்படுகின்றது.**

மறவாமல் பாருங்கள்!! மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்!

*பிரியமானவர்களே! ஷாலோம் ஊழியத்தின் மூலம் ஒளிபரப்பப்படுகின்ற*
*இந்த நிகழ்ச்சியை வாரந்தோறும் மறவாமல் கண்டு,*
*ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,*
*தேவாசீர்வாதம் பெறவும் அன்புடன் அழைக்கிறோம்*